03.11.2017

தி இந்து
தமிழால் இணைவோம்

# அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலோர மாவட்டங்களில் கனமழை தொடரும்: வானிலை ஆய்வு மையம்



இடம்: சென்னை அவ்வை சண்முகம் சாலை | படம்: எல்.சீனிவாசன்



படம்: எல்.சீனிவாசன்



இடம்: சென்னை அவ்வை சண்முகம் சாலை | படம்: எல்.சீனிவாசன்

கடலோர மாவட்டங்களின் சில இடங்களில் கன மழையும் ஓரிரு இடங்களில் மிக கன மழையும் பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக இன்று நவம்பர் 3-ம் தேதி செய்தியாளர்களை சந்தித்த சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் எஸ்.பாலசந்திரன், "கடந்த 24 மணி நேரத்தில் கடலோர மாவட்டங்களில் பரவலாக மழை பெய்துள்ளது. ஒரு சில இடகளில் கன மழை பதிவாகியுள்ளது.


உள் மாவட்டங்களில் லேசான மழை பெய்துள்ளது. ஒரு இல இடங்களில் கன மழை பெய்துள்ளது. சென்னை, மயிலாப்பூர், டிஜிபி அலுவலகம் ஆகிய இடங்களில் 30 செ.மீ. மழைப்பொழிவு பதிவாகியுள்ளது.

**மழை அளவு..**

டிஜிபி அலுவலகம் 30 செ.மீ., சத்யபாமா பல்கலைக்கழகம் 20 செ.மீ., தரமணி 19, நுங்கம்பாக்கம்- 18, மீனம்பாக்கம் 14,அண்ணா பல்கலைக்கழகம் 13, தாம்பரம் 12, மகாபலிபுரம் 11, சோழவரம் 9, ஓலப்பாக்கம், சிதம்பரம், மாதவரம், காரைக்கால், பொன்னேரி, ஶ்ரீவைகுண்டம் ஆகிய இடங்களில் 8 செ.மீ. மழை பதிவானது.

**காற்றழுத்த தாழ்வு நிலை...**

தென் மேற்கு வங்கக் கடலில் மையம் கொண்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை, தற்போது இலங்கை மற்றும் தமிழக கடற்கரையை ஒட்டி நிலவி வருகிறது. இரண்டு நாட்களாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை அங்குமிங்கும் நகர்ந்து கொண்டிருக்கிறது. தற்போதைய வானிலையின்படி, 2 நாட்களுக்கு இதே நிலை தொடரும்.




செயற்கைக்கோள் புகைப்படம் | நவம்பர் 3 பகல் 12 மணிக்கு எடுக்கப்பட்டது.

**மழை வாய்ப்பு...**

அடுத்த 24 மணி நேரத்துக்கு கடலோர மாவட்டங்களின் அனேக இடங்களில் மழை பெய்யும். ஒரு சில இடங்களில் கன மழையும், ஓரிரு இடங்களில் மிக கன மழையும் பெய்ய அதிக வாய்ப்புள்ளது.

உள் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யும். சென்னை மற்றும் புறநகரின் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

மீனவர்கள் தமிழகம் ஒட்டிய கடலுக்குப் போகும்போது எச்சரிக்கையுடன் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்" என்றார்.

## திருவள்ளூர் மாவட்டத்தில் பெரும்பாலான ஏரிகள் முழு கொள்ளளவை எட்டின



வடகிழக்கு பருவ மழை காரணமாக, திருவள்ளூர் மாவட்டம் ஆரணி ஆற்றின் குறுக்கே கும்மிடிப்பூண்டி அருகே உள்ள அன்னப்பன்நாயக்கன் குப்பம் அணைக்கட்டு நிரம்பி வழிகிறது. அதில், நீராடும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள்.

திருவள்ளூர் மாவட்டத்தில் தொடரும் வடகிழக்கு பருவமழையினால் ஏரிகள் மற்றும் அணைக்கட்டுகள் நிரம்பி வழிகின்றன.

தமிழகத்தில் தொடங்கியுள்ள வடகிழக்கு பருவமழை, கடந்த மாதம் 29-ம் தேதி இரவு முதல், திருவள்ளூர் மாவட்டத்தில் பரவலாக கனமழை பெய்து வருகிறது. விட்டு விட்டு பெய்துவரும் இந்த கனமழையினால், ஆவடி, திருநின்றவூர், அத்திப்பட்டு, பொன்னேரி, திருவள்ளூர், கும்மிடிப்பூண்டி உள்ளிட்ட பகுதிகளில் பிரதான சாலைகள், உட்புற சாலைகள் மற்றும் குடியிருப்பு பகுதிகள் மற்றும் காலி மனைகளில் ஆங்காங்கே மழைநீர் தேங்கிய வண்ணம் உள்ளன.

மேலும் பூந்தமல்லி, பொன்னேரி, ஆவடி, திருவள்ளூர் அருகே உள்ள மணவாளநகர், புங்கத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் அரசுப் பள்ளி மைதானங்கள் மற்று அரசு அலுவலக வளாகங்களில் மழைநீர் தேங்கி வருகின்றன. தேங்கிய மழைநீரை அகற்றும் பணியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு வருகிறது.

மாவட்டத்தில் உள்ள பொதுப்பணித் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் உள்ள 1, 269 ஏரிகளில், ஆவடி- கோயில் பதாகை ஏரி, பம்மதுகுளம்-லட்சுமிபுரம் ஏரி உள்ளிட்ட 34-க்கும் மேற்பட்ட ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. ஆகவே, உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

கடந்த 2 ஆண்டுகள் வறண்டுக்கிடந்த ஆரணி ஆற்றிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஊத்துக்கோட்டை, பெரியபாளையம், ஆரணி, பொன்னேரி வழியாக பழவேற்காடு அருகே கடலை நோக்கி செல்லும் இந்த ஆரணி ஆற்றின் குறுக்கே கும்மிடிப்பூண்டி அருகே உள்ள அன்னப்பன்நாயக்கன் குப்பம் அணைக்கட்டு நிரம்பியுள்ளது.

2.60 மீட்டர் உயரம் கொண்ட இந்த அணைக்கட்டு நிரம்பியதால், மதகுகள் மூலம் அருகில் உள்ள ஏரிகளுக்கு உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. அதனையும் மீறி, 10 செ.மீ., உயரத்துக்கு மழைநீர் வழிந்து செல்கிறது. அவ்வாறு வழிந்து செல்லும் மழைநீரில், சிறுவர்கள், இளைஞர்கள் நீராடி மகிழ்வதை காணமுடிந்தது.

அதே போல், பொன்னேரி அருகே ஆரணி ஆற்றின் குறுக்கே உள்ள10 அடி உயரமுள்ள லட்சுமிபுரம் அணைக்கட்டு நிரம்பியுள்ளது. கால்வாய் மூலம் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மேலும், அம்பத்தூர், கொரட்டூர் பகுதிகளில் இருந்து வெளியேறும் மழைநீர், பொதுப்பணித் துறைக்கு சொந்தமான கால்வாய் மூலம் ரெட்டேரிக்கு சென்றுக் கொண்டிருக்கிறது. அந்த நீர் எளிதாக செல்ல வசதியாக புழல் அருகே உள்ள கதிர்வேடு பகுதியில், கால்வாயில் படர்ந்துள்ள வெங்காய தாமரைகளை பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றும் பணி நடந்து வருகிறது.

நீர் நிலைகள் நிரம்பும் வகையில் பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதே நேரத்தில், வடகிழக்கு பருவமழையினால் கிடைக்கும் மழைநீரை முழுமையாக நீர்நிலைகளில் சேமித்து வைத்துக் கொள்ள ஏதுவாக மாவட்டத்தில் உள்ள அனைத்து ஏரிகள் மற்றும் வரத்துக்கால்வாய்கள் முழுமையாக தூர்வாறப்படவில்லை எனவும், ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை எனவும் விவசாயிகள் குற்றம்சாட்டுகின்றனர்.

## காஞ்சிபுரம் மாவட்டத்தில் 98 ஏரிகள் நிரம்பின: மேலும் 148 ஏரிகளில் 75 சதவீதம் தண்ணீர்



காஞ்சிபுரம் பாலாற்றில் திருமுக்கூடல் பகுதியில் பெருக்கெடுத்து ஓடும் தண்ணீர்.

தொடர் மழை காரணமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 98 ஏரிகள் நிரம்பின. மேலும் 148 ஏரிகளில் 75 சதவீதம் அளவுக்குத் தண்ணீர் நிரம்பியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த 3 தினங்களாக தொடர் மழை பெய்து வந்தது. வேடந்தாங்கல் ஏரி, வளையப்புதூர் ஏரி உட்பட 98 ஏரிகள் முழுமையாக நிரம்பியுள்ளன. அதேபோல் 148 ஏரிகளில் 75 சதவீதம் அளவுக்கு நீர் நிரம்பியுள்ளன.

பாலாறு, செய்யாறு, வேகவதி ஆறு ஆகிய ஆறுகள் கலக்கும் இடமான திருமுக்கூடல் பகுதியில் அதிக அளவு நீர் ஆறுகளில் ஓடுகிறது. அதிக மழை பெய்தால் குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் புகுவதை தடுக்க மஞ்சள் நீர் கால்வாய் பல்வேறு இடங்களில் தூர்வாரப்பட்டு வருகிறது.

பல்வேறு ஏரிகளுக்கும் தொடர்ந்து நீர் வரத்து இருப்பதால் மேலும் சில ஏரிகள் விரைவில் நிரம்ப வாய்ப்பு உள்ளது என்று பொதுப் பணித்துறையினர் தெரிவித்தனர்.

கடந்த 3 தினங்களாகப் பெய்த மழையளவு நேற்று முன்தினம் இரவிலிருந்து குறைந்துள்ளது. நேற்று காலை 8 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில்

காஞ்சிபுரம்-24.40மி.மீ., செங்கல்பட்டு–37மி.மீ., மதுராந்தகம்–7 மி.மீ, தாம்பரம்–11 மி.மீ., திருக்கழுக்குன்றம்-31.80 மி.மீ., மாமல்லபுரம்-51 மி.மீ., உத்திரமேரூர்–15 மி.மீ., செய்யூர்–3.20 மி.மீ., கேளம்பாக்கம்–78 மி.மீ., ஸ்ரீபெரும்புதூர்-6.30 மி.மீ. மழையளவு பதிவாகியுள்ளது.

மாவட்டம் முழுவதும் 264.70 மி.மீ. மழையளவும், சராசரியாக 26.47 மி.மீ மழையளவும் பதிவாகி யுள்ளது.

## 2 ஆண்டுகளுக்குப் பிறகு வேடந்தாங்கல் ஏரி நிறைந்தது



தொடர் மழை காரணமாக நீர் நிரம்பிக் காணப்படும் வேடந்தாங்கல் ஏரி.

காஞ்சிபுரம் மாவட்டத்தின் பறவைகள் சரணாலயமாகத் திக ழும் வேடந்தாங்கல் ஏரி நேற்று முன்தினம் இரவு நிரம்பியது.

மதுராந்தகம் அருகே உள்ளது வேடந்தாங்கல் ஏரி. இந்த ஏரி காஞ்சிபுரம் மாவட்டத்தின் பறவைகள் சரணாலயமாக விளங்குகிறது. இந்த ஏரியில் ஆஸ்திரேலியா, பர்மா, பாகிஸ்தான், இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து பெலிக்கன், நத்தை கொத்தி நாரை, சைபீரிய கொக்கு உட்பட ஆயிரக்கணக்கான பறவைகள் வந்து தங்கி இனப் பெருக்கம் செய்துவிட்டுச் செல்கின்றன. இந்தப் பறவைகளைக் காண சுற்றுலாப் பயணிகள் வருவதால் வேடந்தாங்கல் காஞ்சிபுரம் மாவட்டத்தின் முக்கிய சுற்றுலா இடமாகத் திகழ்கிறது.

தற்போது பெய்துவரும் வட கிழக்கு பருவமழை காரணமாக வளையப்புதூர் ஏரி நிரம்பி அந்த நீர், வேடந்தாங்கல் ஏரிக்கு வந்து கொண்டிருந்தது. இந்நிலையில் வேடந்தாங்கல்

ஏரி நேற்று முன்தினம் இரவு முழுமையாக நிரம்பியது. உபரி நீர் ஏரிக் கோடி வழியாக வெளியேறி வருகிறது.

**வனச்சரகர் ஆய்வு**

வேடந்தாங்கல் ஏரி நிரம்பியதைத் தொடர்ந்து அதன் கரைகள், மதகுகள் எல்லாம் எவ்வாறு உள்ளன என்பதை வனச் சரகர் சுப்பையா நேற்று ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நேற்று மாலை கணக்கெடுப்பின்படி சுமார் 11,700 பறவைகள் தற் போது இந்த சரணாலயத்தில் உள்ளன.

இந்த ஏரி கடந்த 2015-ம் ஆண்டு சென்னை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தின்போது நிரம்பியது. இரண்டாண்டுகளுக்குப் பின் தற்போது இந்த ஏரி நிரம்பியுள்ளது என்றார்.